டிஎன்பிஎஸ்சி முறைகேட்டில் இதுவரை 3 போலீஸ்காரர் கைது

இன்னொரு போலீஸ் பூபதியும் சிக்கினார்

சித்தாண்டி வாக்குமூலம்: ஜெயக்குமாரை பிடிக்க தனிப்படை

சென்னை, பிப்.5:

குரூப் 2 முறைகேடு தொடர்பாக போலீஸ்காரர் சித்தாண்டியை தொடர்ந்து அவரது கூட்டாளியான இன்னொரு போலீஸ்காரர் பூபதியும் கைது செய்யப்பட்டார். இருவரும் சென்னை கொண்டு வரப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

கைதான சித்தாண்டி போலீசில் அளித்த வாக்குமூலத்தில் தனக்கு இடைத்தரகர் ஜெயக்குமாரை 5 ஆண்டுகளாக தெரியும் என்றும், அவரிடம் முறைகேட்டிற்காக பணம் கொடுத்தேன் என்றும் கூறியுள்ளார்.

டிஎன்பிஎஸ்சி நடத்திய குரூப் 4 மற்றும் குரூப் 2 தொடர்பாக இதுவரை 25 பேரை சிபிசிஐடி போலீசார் கைது செய்துள்ளனர்.

தலைமறைவாக இருந்த போலீஸ்காரர் சித்தாண்டியை போலீசார் தேடி வந்தனர். இவர் தனது மனைவி சண்முகப்பிரியா, தம்பி வேல்முருகன் ஆகியோருக்கு குரூப் 2 தேர்வில் முறைகேடு செய்து அதிகாரிகள் பதவி வாங்கிக்கொடுத்தவர் ஆவார். மேலும் வேண்டப்பட்டவர்களுக்கு அரசு பதவி வாங்கிக்கொடுத்து இருக்கிறார். தேடப்பட்டு வந்த இவர் சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் உள்ள ஒரு தென்னந்தோப்பில் பதுங்கியிருந்த போது போலீசாரிடம் சிக்கினார். கைது செய்யப்பட்ட அவரை நேற்று இரவே போலீசார் சென்னை அழைத்து வந்தனர்.

இதனிடையே குரூப் 2 முறைகேட்டில் ஈடுபட்ட தலைமை செயலகத்தில் நிதித்துறையில் அலுவலக உதவியாளராக பணியாற்றும் தீபக், வேலூர் வணிக வரித்துறை உதவியாளர் வினோத்குமார். ஆற்காடு வணிக வரித்துறை உதவியாளர் அருண்பாலாஜி, நாகர்கோவில் வணிகவரித்துறை உதவியாளர் தேவி ஆகிய 4 பேரும் நேற்று கைது செய்யப்பட்டனர். இந்த 4 பேரும் இடைத்தரகர் ஜெயக்குமாரிடம் ரூ.8 லட்சம் முதல் 13 லட்சம் வரை பணம் கொடுத்து அரசு பணியில் சேர்ந்ததாக சிபிசிஐடி போலீசார் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே சித்தாண்டியின் கூட்டாளியான சிவகங்கையை சேர்ந்த போலீஸ்காரர் பூபதியையும் இன்று போலீசார் கைது செய்தனர். இருவரிடமும் எழும்பூரில் உள்ள சிபிசிஐடி தலைமை அலுவலகத்தில் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. சித்தாண்டி அளித்த வாக்குமூலத்தில் தனக்கு இடைத்தரகர் ஜெயக்குமாரை 5 ஆண்டுகளாக தெரியும் என கூறியுள்ளார். மேலும் ஜெயக்குமாரிடம் லட்சக்கணக்கில் பணம் கொடுத்ததை ஒப்புக்கொண்ட அவர் முறைகேட்டில் அதிகாரிகளுக்கு உள்ள தொடர்பை குறித்து தனக்கு எதுவும் தெரியாது என கூறியுள்ளார்.

தலைமறைவாக உள்ள முக்கிய இடைத்தரகர் ஜெயக்குமார், ஆந்திரா, கேரளா அல்லது கர்நாடகத்தில் பதுங்கியிருக்கலாம் எனள கிடைத்த தகவலை தொடர்ந்து தனிப்படை போலீசார் அங்கு விரைந்துள்ளனர். ஜெயக்குமாரிடம் விசாரணை நடத்தினால் முறைகேடு பற்றி இன்னும் பல திடுக்கிடும் தகவல்கள் கிடைக்கும் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர.

டிஎன்பிஎஸ்சி முறைகேட்டில் கைதான சித்தாண்டி, பூபதி மற்றும் ஏற்கனவே கைதான முத்துக்குமார் ஆகிய மூவரும் போலீஸ்காரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றவர்கள் அரசு அதிகாரிகள் மற்றும் இடைத்தரகர்கள் ஆவர்.

நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற இந்திய சர்வதேச தோல் கண்காட்சியை மத்திய அமைச்சர் மகேந்திரநாத் பாண்டே தொடங்கி வைத்தார். உடன் தமிழக அமைச்சர்கள் எம்.சி. சம்பத், நிலோஃபர் கஃபீல்.

உலக புற்றுநோய் தினத்தையொட்டி பெருங்குடியில் உள்ள ஜெம் மருத்துவமனையில் நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ரோட்டரி கிளப் மாவட்ட கவர்னர் சந்திரமோகன், மவுண்ட் சீயோன் மருத்துவக்கல்லூரி தலைவர் டாக்டர் ஃபசில் மரிக்கர் ஆகியோர் பங்கேற்றனர்.

புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு பேரணி

சென்னை, பிப்.5:

புற்றுநோய் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் வி.எஸ்., மருத்துவ மனை மேற்கொண்ட முயற்சியே இந்த நடைபயிற்சி பேரணியாகும். இதனை அம்பா ஸ்கைவாக்கின் நிர்வாக இயக்குநர் அம்பா பழனியப்பன் கொடிய சைத்துத் தொடங்கி வைத்தார். இந்த நடைபயிற்சி பேரணியில் பல்வேறு வயதினை உடையவர்களும், பல்வேறு இடங்களில் பணிபுரிவோர்களும் கலந்து கொண்டதைக் காண முடிந்தது.

இந்த நடைபயிற்சி பேரணியானது சேத்துப்பட்டு கிழக்கு ஸ்பர்டாங்க் சாலையில் உள்ள வி.எஸ்.மருத்துவ மனையின் அதிநவீன புற்றுநோய் சிகிச்சை மையத்தில் இருந்து தொடங்கியது. பேரணியானது காசாமேஜர் சாலை, தமிழ் சாலை மற்றும் பி.டி., சாலை எழும்பூர் வழியாகச் சென்று மீண்டும் கிழக்கு ஸ்பர்டாங்க் சாலையில் உள்ள வி.எஸ். மருத்துவமனையை வந்தடைந்தது. தமிழகத்தில் ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டமைக்க வேண்டும் என்ற வி.எஸ்.மருத்துவமனையின் பல்வேறு வகையான முயற்சிகளில் இந்த நடைபயிற்சி பேரணியும் ஒன்றாகும். இந்தப் பேரணியில் வி.எஸ்., மருத்துவ மனை குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பேராசிரியர் டாக்டர் எஸ்.சுப்ரமணியன், மூட்டு அறுவை சிகிச்சை மருத்துவரும், வி.எஸ்., மருத்துவமனையின் மெடிக்கல் இயக்குநருமான டாக்டர் எஸ்.சுந்தர், வி.எஸ்., மருத்துவமனைகள் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் முத்து சுப்ரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பதவியேற்பு

புதுச்சேரி, பிப்.5:

ஜேசிஐ பாண்டிச்சேரி கிளை இயக்கத்தின் 2020 ம் ஆண்டின் தலைவராக முத்துக்குமரன் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் செயலாளர் நரேந்திரன், துணை தலைவர்களாக ஜகதீஷ், சிவகுரு, புண்ணியமூர்த்தி,துளசிதரன், கணபதி இயக்குனர்களாக ஹரிஹரன், நீலகண்டன், ஹர்ஷத்கான், கணேஷ், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர். மேலும் ஜேசிஐ பாண்டிச் சேரி ஈவ்ஸ் கிளை இயக்கத்தின் 2020 ம் ஆண்டின் தலைவராக சவித்தா, ஆட்சிமன்ற குழு உறுப்பினர்கள் செயலாளர் தேவி, துணை தலைவர்களாக நித்தியா,கலைச்செல்வி, லலிதா ஆகியோரும் பதவி தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று பதவியேற்றக்கொண்டனர்.

விழாவில் சிறப்பு விருந்தினராக அரசு கொறடா அனந்தராமன், கௌரவ விருந்தி னர்களாக பேராசிரியர் இளங்கோவன், ஜேசிஐ 16 ன் தலைவர் இம்ரான் அஹமத், சிறப்பு அழைப்பாளர்களாக ஜேசிஐ மண்டல 16 ன் துணை தலைவர் சங்கர்தயால் ஆகியோர் கலந்துகொண்டனர்,

கே.சி.நாடார் பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறை

ஜெயக்குமார் திறந்து வைத்தார்

சென்னை, பிப்.5:

ராயபுரத்தில் உள்ள கே.சி.நாடார் பள்ளியில் புதிதாக அமைக்கப் பட்ட ஸ்மார்ட் வகுப்பறையை மீன்வளத்துறை அமைச்சர் ஜெயக்குமார் திறந்து வைத்தார்.

அமைச்சர் ஜெயக்குமார் படித்த ராயபுரத்தில் உள்ள கே.சி.நாடார் பள்ளியில் புதிதாக அமைக்கப்பட்ட ஸ்மார்ட் வகுப்பறையை திறந்து வைத்து திருக்குறள் எழுதி மாணவர்களுக்கு பாடம் நடத்தினார். அதனை தொடர்ந்து தனது நினைவுகளை செய்தி யாளர்களிடம் பகிர்ந்து கொண்டார். திமுக கார்பரேட் கட்சியாக மாறிவிட்டது. இனி அவர்களுக்கு திராவிட, பெரியார் கொள்கைகள் கிடையாது, மேலும், டி.என். பி.எஸ்.சி., விவகாரத்தில் என் மீதும், அரசு மீதும் அவதூறுகளை திமுக பரப்புகிறது. அவர்கள் அதற்கு நீதிமன்றத்தில் பதில் சொல்ல வேண்டியிருக்கும். குடியுரிமை சட்டம் குறித்த நடிகர் ரஜினியின் கருத்துக்கு பதிலளித்த அவர், இஸ்லாமிய சிறுபான்மை மக்களுக்காக ரஜினி குரல் கொடுப்பது நல்ல விஷயம்.

இலங்கை தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்குவது குறித்து ரஜினி இப்போது தான் பேசுகிறார். ஆனால், அதிமுக ஏற்கனவே அந்த நிலைப்பாட்டில் தான் உள்ளது.

5,8 ஆம் வகுப்பு பொது தேர்வு மக்களின் எண்ணத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் 5,8 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்.

காஞ்சி ஸ்ரீமுத்தீஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்

ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு

காஞ்சிபுரம், பிப். 5:

63 நாயன்மார்களில் ஒருவரான சிறு குறிப்புத்தொண்டர் முக்தி பெற்ற தலமாகிய காஞ்சிபுரம் அருள்மிகு முத்தீஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேகம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

சைவ சமயத்தில் சிவபெருமானுக்கு தொண்டு புரிந்த 63 நாயன்மார்களில் ஒருவரான ஏகாலி வம்சத்தில் தோன்றி சிவனடியார்களுக்கு உடைகளைத் துவைத்து கொடுத்த சிறு குறிப்பு தொண்டருக்கு சிவ பெருமான் முக்தி அளித்த தலம் காஞ்சிபுரம் காந்தி சாலையில் உள்ள அருள்மிகு முக்தீஸ்வரர் திருக்கோவில் ஆகும்.

பெரிய புராணத்தில் பாடல் பெற்ற திருக்கோவில் கடந்த 2004 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து 16 ஆண்டுகளுக்கு பிறகு 18.5 லட்சம் செலவில் திருப்பணிகள் நடைபெற்று முடிக்கப்பட்டு கும்பாபிஷேக விழா இன்று சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவையொட்டி யாகசாலை பூஜைகள் நடைபெற்று பல்வேறு நதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் சிவாச்சாரியார்கள்



வேத மந்திரங்கள் ஒலிக்க ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு ராஜகோபுரம் மற்றும் சன்னதி கோபுரங்களில் புனித நீர் தெளித்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.

வெகு விமர்சையாக நடைபெற்ற கும்பாபிஷேக விழாவை காண காஞ்சிபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு முத்தீஸ்வரர் சுவாமியை வழிபட்டனர். நிகழ்ச்சியில் செயல் அலுவலர்கள் தியாகராஜன் செந்தில் பெரியசாமி மற்றும் உபயதாரர்கள் அதிமுக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர் இதில் பக்தர்களுக்கு புளியோதரை வெண்பொங்கல் சக்கரை பொங்கல் பக்தர்களுக்கு வழங்கப்பட்டன

பெயர் மாற்றம்

சென்னை-600 100, பெரும்பாக்கம், நூக்கம்பாளையம், காமராஜர் தெரு, கலர் கேசில், AF1 என்ற முகவரியில் குடியிருக்கும் திரு. அருண்செல்வம் என்பவரின் மகனாகிய ஜீதேந்திரா (JEETHENDRA) என்கிற நான் (பிறந்த தேதி:21.10.1985) இனிமேல் GIVEN NAME: ஜீதேந்திரா, SUR NAME: அருண்செல்வம் (GIVEN NAME: JEETHENDRA, SUR NAME:ARUNSELVAM) என்று அறியப்படுவேன்.

ஜீதேந்திரா
JEETHENDRA

ஸ்ரீ சர்வராய சுகர்ஸ் லிமிடெட்

CIN:U01115TN1956PLC003435

பதிவு அலுவலகம்: எண்.12, எத்திராஜ் சாலை, எழும்பூர், சென்னை-600 008. தமிழ்நாடு, இந்தியா. போன்: 044 - 2827 6182.

இ-மெயில்: chennai@srisarvarayasugars.in

இயக்குனர்கள் குழு கூட்டம் பற்றிய அறிவிப்பு

2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 29(1) ஷரத்தின் கீழ் இதர விஷயங்களுடன் சேர்த்து 31.12.2019 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலிப்பதற்காக கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் 12.02.2020 புதன்கிழமையன்று பகல் 11.30 மணியளவில் எண்.12, எத்திராஜ் சாலை, எழும்பூர், சென்னை-600 008 என்ற முகவரியில் உள்ள கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் நடைபெறும் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ சர்வராய சுகர்ஸ் லிமிடெடுக்காக
ஒ-ம்/- Dr. S.B.P.P. ராம்மோகன்
இணை நிர்வாக இயக்குனர்

இடம்: சென்னை
தேதி : 02.02.2020

PUBLIC NOTICE

It Is Hereby Informed That To The General Publice That My Client's Mr.S.Ganesan Son Of Mr.A.Sankaran, Aged About 54 Years Mrs. Jayalakshmi Wife Of Mr.S.Ganesan, Aged About 49 Years Both Residing At Mithila Flats, No.31a, Church Road, Radha Nagar, Chrompet, Chennai-600 044 Is The Absolute Owner Of All That Piece And Parcel Of 604.5 Sq.Ft., Undivided Share Of Land Out Of 2418 Sq.Ft., Together With Plinth Area 746 Sq.Ft., At Flat No.D, First Floor, Eastern Wing, Plot No.21-B, Church Road, Radha Nagar, Chromepet, Chennai-600 044, Comprised In Survey No.435/5, Situated At Jameen Pallavaram Village, Pallavaram Taluk, Kancheepuram District, Within The Registration District Of Chennai-South And Sub-Registration District Of Pallavaram. My clients had given General Power of attorney on the above mentioned property to one Mrs.Kayalvizhi wife of Mr.Kavaskar residing at No.F1, Land Marvel Apts, Gangai Amman Koil 4th Street, Vadapalani, Chennai-600 026under a Registered General Power of Attorney Deed Document No.1732 of 2018, Book-I, Dated:12.03.2018, in the file of S.R.O.PALLAVARAM. Now my client came to know that the Power Agent Mrs.Kayalvizhi wife of Mr.kavaskar Colluded with some unknown persons act against the General Power of Attorney and completely failed to act for the good of my clients so my client's cancelled the General Power of Attorney under a Registered Deed of Cancellation of General Power of Attorney Document No.889 of 2020, Dated: 03.02.2020, in the file of S.R.O.PALLAVARAM. Hereafter the above said Mrs.Kayalvizhi wife of Mr.Kavaskar is no more a Power agent to my client's and she doesn't have any liability or hold over the above said property. If anyone having any transaction officially/unofficially regarding the above said property with Mrs.Kayalvizhi my client's are not held responsible and no one can claim to my client's for the same.

G.SARANYA, B.A., B.L..
Advocate & Commissioner of Oaths,
No.25/12, Rajai street, Radha Nagar,
Chrompet, Chennai - 600 044
Cell:9710174346

பெயர் மாற்றம்

சென்னை-600 122, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, தண்டலம் அஞ்சல், தரப்பாக்கம், பாரதி நகர், காந்தி சாலை, எண்.2/115 என்ற முகவரியில் குடியிருக்கும் திரு. தயாளன் என்பவரின் மகனாகிய D. ராஜசேகரன் (D.RAJASEKARAN) என்கிற நான் (பிறந்த தேதி: 25.12.1973) இனிமேல் D.ராஜசேகர் (D.RAJASEKAR) என்று அறியப் படுவேன்.

D.ராஜசேகரன்
D.RAJASEKARAN

அட்வென்ட் கம்ப்யூட்டர் சர்வீசஸ் லிமிடெட்

(CIN:L33111TN1984PLC010675)

பதிவு அலுவலகம்: சுவாதி டவர்ஸ், K22, 7-வது தளம், 5 & 7, துர்காபாய் தேஷ்முக் சாலை, ஆர்.ஏ.புரம், சென்னை - 600 028. போன்: 044-4558 0095, பேக்ஸ்: 044-2495 3688
இ-மெயில்: compliance.officer@adventcomputer.in;; இணையதளம்: www.adventcomputer.in

அறிவிப்பு

31.12.2019 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் 9 மாதங்களுக்கான கம்பெனியின் தனிப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலிப்பதற்காகவும், தலைவர் ஒப்புதலுடன் கம்பெனியின் இதர விஷயங்கள் குறித்து விவாதிப்பதற்காகவும், அட்வென்ட் கம்ப்யூட்டர் சர்வீசஸ் லிமிடெட் கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் 11.02.2020, செவ்வாய்க்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில் கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் நடைபெற உள்ளது என்பது 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 47-வது விதிமுறையின் கீழ் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலும் கம்பெனியின் நன்னடத்தை விதியின்படி, உள் வர்த்தகத்தை தவிர்ப்பதற்காகவும், 2015-ம் வருடத்திய SEBI (உள் வர்த்தகத்தை தடை செய்தல்) விதிமுறைகளின் கீழும், அனைத்து ஊழியர்களுக்கும் மற்றும் இயக்குனர்களுக்குமான கம்பெனியின் பங்கு பரிவர்த்தனைகள் தொடர்பான வர்த்தக நடவடிக்கை 01.01.2020 முதல் 13.02.2020 (இந்த இரு தினங்கள் உள்பட) அன்று இயக்குனர்கள் குழுவால் 31.12.2019 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் 9 மாதங்களுக்கான தனிப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளுக்கு ஒப்புதல் பெறப்பட்ட பிறகு 48 மணி நேரம் வரை மூடப்பட்டிருக்கும். அவைகள் பங்கு வர்த்தக நிறுவனத்திற்கு 31.12.2019 அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கூட்டம் தொடர்பான அறிவிப்பை கம்பெனியின் www.adventcomputer.in என்ற இணையதளத்திலும், கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்படும் பங்கு வர்த்தக நிறுவனமான BSE லிமிடெட் நிறுவனத்தின் www.bseindia.com என்ற இணையதளத்திலும் காணலாம்.

அட்வென்ட் கம்ப்யூட்டர் சர்வீசஸ் லிமிடெடுக்காக
ஒ-ம்/-
மைக்கேல் அருள்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்

தேதி : 04.02.2020
இடம்: சென்னை

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within THREE Months thereafter, I **MR. JITHENDRAN.S,** S/o. S. Subramanian, aged 35 Years Permanently residing at Door No. 287-B T.V.S Avenue, Anna Nagar West., Chennai – 600 101, Tamilnadu, India intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Buildings, High court Campus, Chennai-104.

Those who have any valid Objections may Notify the same to the Bar Council within 10 days.

MR. JITHENDRAN.S

பொது அறிவிப்பு

சென்னை- 600 013, ராயபுரம், ஷேக் மேஸ்திரி தெரு, எண்.118/69-ல் வசிக்கும் எனது கட்சிக்காரர் திரு.ஸ்ரீனிவாசன் அவர்களின் மனைவி திருமதி. S.புவனேஸ்வரி, வயது-54, அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் வெளியிடும் பொது அறிவிப்பு என்னவென்றால்,

எமது கட்சிக்காரரின் தாயார் காலஞ் சென்ற மகேஸ்வரி அம்மாள் பெயரில் உள்ள அசையா சொத்தின் கிரயப்பத்திரம் ஆவண எண்.369/1968, தேதி. 15.03.1968, சர்வே எண்.312/2, பிளாட் எண்.80, மொத்தம் 3920 Sq.ft திருவொற்றியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட சொத்தின் அசல் கிரைய பத்திரம் கடந்த 01.02.2020 அன்று பையுடன் வைத்து எடுத்துக் கொண்டு விம்கோ நகரில் இருந்து எண்ணூரில் உள்ள அவரது உறவினர் வீட்டிற்கு பேருந்தில் சென்றார். அப்போது சொத்து தொடர்பான ஆவணம் இருந்த பையை காணவில்லை. எவரேனும் கண்டுபிடித்தால் கீழ்க்கண்ட முகவரியில் தெரியப்படுத்தவும் தவறான பரிவர்த்தனையில் ஈடுபட்டால் அது எனது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது என்றும் மேலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

N.சரவணன் BA.,BL.,
S.கமலதாசன் MA.,B.L.,
வழக்கறிஞர்கள்
திருவொற்றியூர் வழக்கறிஞர்.
அசோசியேஷன், திருவொற்றியூர்.
சென்னை- 600 019.

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திரு.ஏழுமலை த/பெ, நடேசன், ஆ/வயது-75, எண்.51, பெருமாள் கோயில் தெரு, கோணம்பேடு, அயப்பாக்கம், சென்னை- 600 077, என்ற விலாசத்தில் வசிப்பவர் தனது பெயரில் ஆவடி, பருத்திப்பட்டு கிராமம், சர்வே எண் -519/1A2,519/2B, , 523/1A உள்ள இடத்தினை பூந்தமல்லி சார் பதிவு அலுவலகத்தில் 22.03.1976 அன்று பதிவுசெய்யப்பட்டிருந்த அசல் கிரைய ஆவணத்தை (ஆவண எண்.509/1976) கடந்த ஞாயிற்றுக்கிழமை 12.01.2020 அன்று அய்யபாக்கம் தனக்கில்லா கேம்ப் அருகில் உள்ள மோகன் ஜெராக்ஸ் கடையில் தொலைத்து விட்டார். எனவே இதனை கண்டெடுப்பவர்கள் மேற்படி எனது கட்சிக்காரரின் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

B. Dharani, B.A.B.L.,
Advocate
No.98, P.H. Road, Avadi Market, Avadi,
Chennai- 600 054.
Cell: 94440 86363

பொது அறிவிப்பு

சென்னை- 600 045, தாம்பரம், காந்தி சாலை, 2-வது தெரு, லட்சுமி,புரம், கதவு எண்,57, என்ற முகவரியில் வசிப்பவரும், திரு.முகம்மது சுல்தான் அவர்களின் மகன் திரு. எம். பீர் மைதீன் அவர்களுக்கு காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வரதராஜபுரம் கிராமம், புல எண். 411/2, பிளாட் எண்.4-ல் அமைந்துள்ள 3200 சதுரடி நிலம் சொந்தமானது. ஆவண எண். 2618/1968 கொண்ட அந்த நிலத்தின் தாய் பத்திரத்தை என் கட்சிக்காரர் கடந்த 20-01-2020 அன்று தர்காஸ்-ல் உள்ள Xerox Shop -ல் நகல் எடுக்கச் சென்ற போது காணாமல் போனது, அதை யாரேனும் கண்டெடுத்தாலோ அல்லது வைத்தாலோ நேரடியாக என் கட்சிக்காரரின் முகவரிக்கோ அல்லது எனக்கோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாறாக மேற்கண்ட ஆவணத்தை வைத்து ஏதேனும் வில்லங்கம் ஏற்படுத்தினால் அது என் கட்சிக்காரரையும், அவரது சொத்தையும் எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.

N.KARUNANITHI, B.A.,B.L.,
Advocate
No.3/67, R.G. Kandigai Dharkas Post,
Chrompet, Chennai- 600 044.
Cell: 9677160175

மாலைச்சுடரில் விளம்பரம் செய்து பயன்பெறுங்கள்

ரிஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 11-வது தளம், பாஸ்கன் பியூச்சுரா ஐடி பார்க், புதிய எண். 10/2, பழைய எண்.56L, வெங்கட்நாராயணா ரோடு, திநகர், சென்னை - 600 017.
CIN:L45200TN2002PLC049601
போன்: +91-44-4340 5950
இ-மெயில்: admin@refex.co.in;
இணையதளம்: www.refex.co.in

அறிவிப்பு

2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 29-வது விதிமுறை மற்றும் 47வது விதிமுறையின் கீழ், இதர விஷயங்களுடன் சேர்த்து 31.12.2019 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத தனிப்பட்ட மற்றும் தொகுக்கப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் பெறுவதற்காக கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் வரும் 13.02.2020, வியாழக்கிழமையன்று, 11-வது தளம், பாஸ்கன் பியூச்சுரா ஐடி பார்க், புதிய எண்.10/2, பழைய எண்.56L, வெங்கட்நாராயணா ரோடு, தி.நகர், சென்னை-600 017 என்ற முகவரியில் உள்ள கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் நடைபெறும் என்பதினை இதன் மேற்கண்ட அறிவிப்பு மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலும் உள்வர்த்தகத்தை தடை செய்வதற்காகவும், BSE லிமிடெட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை எண். LIST/COMP/01/2019-20 மற்றும் பங்கு வர்த்தக நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட 31.12.2019 தேதியிட்ட எங்களது தகவலின் படியும், கம்பெனியின் பங்குகள் பரிவர்த்தனைக்கான 'டிரேடிங் விண்டோ' ஜனவரி 1, 2020 முதல் நிதிநிலை முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு 48 மணி நேரம் வரையிலும் (இந்த இரு தினங்கள் உட்பட) மூடப்பட்டிருக்கும்.

மேற்சொன்ன தகவல் கம்பெனியின் www.refex.co.in என்ற இணைய தளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனமான BSE லிமிடெட் நிறுவனத்தின் www.bseindia.com என்ற இணையதளத்திலும், NSE லிமிடெட் நிறுவனத்தின் www.nseindia.com என்ற இணையதளத்திலும் வெளியிடப்படும்.

ரிஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெடுக்காக
ஒ-ம்/-
இடம்: சென்னை S.கோபாலகிருஷ்ணன்
தேதி: 04.02.2020 கம்பெனி செயலாளர்

பிரீமியர் எனர்ஜி அண்டு இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்

பதிவு அலுவலகம்: டான்கி அபார்ட்மென்ட்ஸ், எண்.34, டாக்டர் P.V. செரியன் கிரிசென்ட், எத்திராஜ் சாலை அருகில், எழும்பூர், சென்னை-600 008.
இ-மெயில்: premierinfra@gmail.com;
இணையதளம்: http://www.premierenergy.in
போன்: 044-2827 0041
CIN: L45201TN1988PLC015521

அறிவிப்பு

இதர விஷயங்களுடன் சேர்த்து 31.12.2019 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் பெறுவதற்காக கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் 14.02.2020 வெள்ளிக்கிழமை அன்று மாலை 4.30 மணியளவில் நடைபெறும் என்பது 2015-ம் வருடத்திய செக்யூரிட்டீஸ் அண்டு எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 29-வது விதிமுறையின் கீழ் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்படி அறிவிப்பினை கம்பெனியின் www.premierenergy.in என்ற இணைய தளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் www.bseindia.com என்ற இணைய தளத்திலும் காணலாம்.

இயக்குனர்கள் குழுவின் சார்பாக
ஒ-ம்/-
M.நாராயணமூர்த்தி
நிர்வாக இயக்குனர்
DIN: 0033 2455

இடம்: சென்னை
தேதி: 04.02.2020

தமிழ்நாடு டெலிகம்யூனிகேசன்ஸ் லிமிடெட்

(டிசிஐஎல், இந்திய அரசு நிறுவனம் மற்றும் டிட்கோ, தமிழ்நாடு அரசு நிறுவனத்துடனான கூட்டு நிறுவனம்)
பதிவு அலுவலகம்: எண்.16, முதல் தளம், அஜீஸ் முல்க் 3-வது தெரு, ஆயிரம் விளக்கு, சென்னை-600 006
CIN: L32201TN1988PLC015705, தொலைபேசி: 044-28292653, இ-மெயில்: ttlcosec@rediffmail.com, இணையதளம்: www.ttlofc.in
31.12.2019 அன்றுடன் முடிந்த 9 மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(இந்திய ரூபாய் நூறுகளில்)

விவரங்கள்	முடிந்த 9 மாதங்கள் 31.12.2019 (த.ஆ.காதது)	முடிந்த ஆண்டு 31.03.2019 (த.ஆனது)	முடிந்த 9 மாதங்கள் 31.12.2018 (த.ஆ.காதது)
செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம்	1,768	5,461	830
நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது)	(958,203)	(1,570,547)	(761,492)
வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	(958,203)	(1,570,547)	(761,492)
வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	(958,203)	(1,570,547)	(761,492)
நடப்பு காலத்துக்கான மொத்தம் விரிவான வருவாய் (வரிக்கு பிந்தைய நடப்பு காலத்துக்கான லாபம் / (நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பிந்தையது) ஆகியவற்றை உள்ளடக்கியது)	(958,203)	(1,593,462)	(761,492)
சம பங்கு மூலதனம்	4,567,620	4,567,620	4,567,620
ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வ் நீங்கலானது)	(15,748,064)	(14,789,861)	(14,335,232)
பங்கு ஒன்றின் வருவாய் (தலா ரூ.10/-) (தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சியில்லாத செயல்பாடுகளுக்கானது) ரூபாயில்			
1) அடிப்படை	(2.10)	(3.44)	(2.49)
2) திட்டம் குறைந்தது	(2.10)	(3.44)	(2.49)

குறிப்புகள்
1. Ind AS-34 விதிமுறைகளின் படியும், 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 133-வது பிரிவின்படி குறிப்பிடப்பட்ட "இடைக்கால நிதிநிலை அறிக்கை" விதிமுறைகளின் படியும், இதர பொருத்தமான விதிமுறைகளின் படியும் மற்றும் இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இதர கணக்கியல் நெறிமுறைகளின் படியும், 31.12.2019 அன்றுடன் முடிந்த இணையான 9 மாதங்களுக்கான Ind AS விதிமுறைகளை பின்பற்றி இடைக்கால நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. SEBI சுற்றறிக்கை எண். CIR/CFD/FAC/62/2016, தேதி: 05.07.2016 படி இணையான காலாண்டுக்கான Ind AS விதிமுறைகளை பின்பற்றி இடைக்கால தணிக்கை செய்யப்படாத தனிப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
2. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான / வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். மேற்சொன்ன காலாண்டு / வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் முழு படிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனங்களான BSE லிமிடெட் நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.bseindia.com) மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் இணைய தளத்திலும் (www.nseindia.com), கம்பெனியின் இணையதளத்திலும் (www.ttlofc.in) காணலாம்.

இயக்குனர்கள் குழுவுக்காகவும், அதன் சார்பாகவும்
பி.வி.ஸ்ரீகாந்த்
நிர்வாக இயக்குனர்

இடம்: புதுடெல்லி
தேதி: 04.02.2020

பின்னி மில்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எண்.4, கற்பகாம்பாள் நகர், மயிலாப்பூர், சென்னை-600 004.
CIN:L171201TN2007PLC065807

31.12.2019 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான தனிப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிக்கை

(ரூபாய் லட்சங்களில்)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 31.12.2019 Ind AS	முடிந்த காலாண்டு 30.09.2019 Ind AS	முடிந்த காலாண்டு 31.12.2018 Ind AS	முடிந்த அரையாண்டு 31.12.2019 Ind AS	முடிந்த அரையாண்டு 31.12.2018 Ind AS	முடிந்த ஆண்டு 31.03.2019 Ind AS த.ஆனது
1.	செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம்	232.35	255.61	242.50	766.09	758.78	971.63
2.	நடப்பு காலத்துக்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (வரி மற்றும் விலக்கு பெற்ற ரகங்களுக்கு முந்தையது)	(306.94)	(319.59)	(330.27)	(959.61)	(1008.87)	(1,357.67)
3.	நடப்பு காலத்துக்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (வரிக்கு முந்தையது, விலக்கு பெற்ற ரகங்களுக்கு பிந்தையது)	(306.94)	(319.59)	(330.27)	(959.61)	(1008.87)	(1,512.84)
4.	நடப்பு காலத்துக்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (வரிக்கு பிந்தையது மற்றும் விலக்கு பெற்ற ரகங்களுக்கு பிந்தையது)	(328.02)	(345.51)	(340.54)	(1101.61)	(1049.09)	(1,558.14)
5.	இதர விரிவான வருவாய் (நிகர வரி)	(0.03)	(0.03)	0.20	(0.08)	0.60	(0.11)
6.	நடப்பு காலத்துக்கான மொத்தம் விரிவான வருவாய் (நடப்பு காலத்துக்கான நஷ்டம் (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பிந்தையது) ஆகியவற்றை உள்ளடக்கியது)	(328.02)	(322.66)	(340.54)	(1101.61)	(1049.09)	(1,558.25)
7.	சமபங்கு மூலதனம்	318.85	318.85	318.85	318.85	318.85	318.85
8.	இதர சம பங்குகள்	NA	NA	NA	NA	NA	(15,706.87)
9.	பங்கு ஒன்றின் வருவாய் (தலா ரூ.10/-) (தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சியில்லாத செயல்பாடுகளுக்கானது)						
	அ) அடிப்படை	(10.29)	(10.12)	(10.67)	(31.01)	(32.88)	(48.87)
	ஆ) திட்டம் குறைந்தது	(10.29)	(10.12)	(10.67)	(31.01)	(32.88)	(48.87)

குறிப்பு:
1. 31.12.2019 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான மேற்காணும் நிதிநிலை முடிவுகள் தணிக்கையாளர்கள் குழுவால் ஒப்புதலுக்காக பரிந்துரைக்கப்பட்டு, 29.012019 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.
2. மேற்குறிப்பிடப்பட்டவைகள் BSE லிமிடெட் நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்ட 31.12.2019 அன்றுடன் முடிந்த காலாண்டுக் கான நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். 31.12.2019 அன்றுடன் முடிந்த மேற்சொன்ன காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவத்தையும் BSE லிமிடெட் நிறுவனத்தின் www.bseindia.com என்ற இணையதளத்திலும் மற்றும் கம்பெனியின் www.bmlindia.com என்ற இணையதளத்திலும் காணலாம்.

பின்னி மில்ஸ் லிமிடெடுக்காக
V.ராஜசேகரன்
நிர்வாக இயக்குனர்

இடம்: சென்னை
தேதி: 29.1.2020